இலங்கையின் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின்(1951) சீர்திருத்தங்கள் மீதான

# முஸ்லிம் பெண்களின் கோரிக்கைகள்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமானது எல்லா முஸ்லிம்களுக்கும் சமத்துவத்தையும், நீதியையும் உத்தரவாதப்படுத்தக் கூடிய வகையில் திருத்தப்படல் வேண்டும். பன்மைத்துவ கலாச்சாரத்தைக் கொண்ட சமூக அமைப்பில் வாழும் இலங்கை முஸ்லிம்கள் தமக்கான சவால்களை முகங்கொடுக்கக் கூடிய வகையில் முஸ்லிம்களின் குறைகளை முக்கியமாக முஸ்லிம் பெண்களினதும், சிறுமிகளினதும் குறைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் இச்சட்டம் திருத்தப்படல் வேண்டும். புனித அல்குர்ஆனின் 4வது சூறா 58வது வசனத்தில் அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கட்டளையிடுகின்றான்.

> ‘‘(நம்பிக்கையாளர்களே! உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட) அமானிதப் பொருட்களை அதன் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடும்படியும், ***மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகின்றான்.*** உங்களுக்கு அல்லாஹ் செய்யும் இவ்வுபதேசம் மெய்யாகவே எவ்வளவு சிறந்தது? நிச்சயமாக அல்லாஹ் செவியுறுபவனாகவும், உற்று நோக்கினவனாகவும் இருக்கின்றான்.’’

சட்டத்தின் ஏற்பாடுகளாவன சகலருக்கும் சமத்துவத்தையும், நீதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் நடபடிச் சட்டமானது பெண்கள் உள்ளடங்கலாக சமூகத்தின் அங்கத்தவர்கள் அனைவரின் தேவைகள் சார்பாகவும் கூருணர்வுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். இந்த அடிப்படையில் சட்டத்தினதும், அதன் நடபடியினதும் சீர்திருத்த முயற்சிகளின் போது கட்டாயம் கருத்தில் கொள்ள வேண்டிய 4 வழிகாட்டற் கொள்கைகள் என நாம் நம்புபவற்றை கீழே விதந்துரைக்கின்றோம்.

## சீர்திருத்தத்திற்கான வழிகாட்டற் கொள்கைகள்

### 1. சமத்துவம், நீதி மற்றும் பாரபட்சமின்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான அரச பொறுப்புடைமை

அனைத்து பிரசைகளும் சமமாகவும், எந்தவிதமான பாரபட்சங்களும் இன்றியும் நடாத்தப்படுவதனை உறுதி செய்ய பங்கும், பொறுப்பும் இலங்கை அரசுக்கு உண்டு. சட்டத்தின் முன் சமம், சட்டத்தின் கீழான சமமான நடாத்துகை என்பது ஒரு அடிப்படை உரிமை. முஸ்லிம் தனியார் சட்டமும் காதிநீதிமன்ற முறைமையும் விசேட சட்டங்கள் என்ற அடிப்படையில் எந்தவொரு முஸ்லிமுக்கும் அரசியலமைப்பில் அடிப்படை உரிமையின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக்களை மறுதலிப்பதற்காக பிரயோகிக்கப்படல் முடியாது. இது அனுமதிக்கப்படுமாயின் சில முஸ்லிம் பிரசைகள் மிகவும் சுலபமாக இரண்டாம் தர பிரசைகளாக ஆக்கப்படுவர். ஆகவேதான் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் ஏற்பாடுகள், நடபடிகள் மற்றும் அமுலாக்கல் என்பன அடிப்படை உரிமைகளை மீறாது என்பதனை இச்சட்ட சீர்திருத்த நடபடிகள் உறுதிப்படுத்தல் வேண்டும். பெண்கள், திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பில் தம் சம்மதத்தை வெளிப்படுத்த பூரண சுயாதிக்கமும், சுயவிருப்பும் உள்ள தனிநபர்கள் என்பதனை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன் இக்கொள்கைக்கான ஆணையையும் வழங்குதல் வேண்டும்.

### 2. சீர்திருத்தத்தில் முக்கிய பங்குதாரர்களாக பெண்கள்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினாலும், காதிநீதிமன்ற முறைமையினாலும் மிக அதிகமாக பாதிப்புக்குள்ளாகின்றவர்களாக பெண்களே காணப்படுகின்றனர். அதுமட்டுமன்றி இச்சட்டம் திருத்தப்படல் வேண்டும் என்பதற்கான கோரிக்கை அடிப்படையில் பெண்களிடம் இருந்தே எழுந்தது. எனவே இச்சட்டத்தினதும், அதன் அமுலாக்கல் நடைமுறையினதும் மீதான பெண்களின் அனுபவங்களும், அப்பெண்களின் நீதிக்கான எதிர்பார்ப்புக்களும் இச்சீர்திருத்த நடபடியில் கருத்தில் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும். தற்போது இடம்பெற்று வரும் சட்டத்திருத்த முன்னெடுப்புக்களில் தீர்மானம் எடுக்கும் தளங்களில் முஸ்லிம் பெண்களுக்கான ஸ்தானம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவர்களின் குரல்களும், கோரிக்கைகளும் செவிமடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் பெண்களே பிரதானமாக பாதிக்கப்படுபவர்கள் என்ற ரீதியில் இச்சட்டத்திருத்த நடபடியில் அவர்கள் இணைக்கப்படல் வேண்டும்.

### 3. முஸ்லிம் சமூகத்தினது பன்மைத்தன்மைக்கும், அதன் வெவ்வேறு கருத்துக்களுக்கும் மதிப்பளித்தல்

இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் பன்மைத்தன்மை கொண்டவர்களாவர். (இது இனத்தின் அடிப்படையில் வேறுபடுகின்றது: உதாரணமாக. சோனகர்கள், மலேயர்கள், மேமன்கள், போறாக்கள், ஏனைய பிற. மேலும் இவர்கள் பின்பற்றும் மத்ஹப் எனப்படும் இஸ்லாமிய அடிப்படைகளிலான வேறுபாடும் உண்டு. அத்துடன் இஸ்லாமிய சிந்தனைக் கோட்பாடுகளிலும் இவர்களிடையே வேறுபாடு காணப்படுகின்றது. சட்டசீர்திருத்த நடபடிகளும், அதன் விளைவான சட்டமும் சமூகத்துள்ளே காணப்படும் இந்த பன்மைத்தன்மையினை அங்கீகரித்தலும், மதித்தலும், பிரதிபலித்தலும் வேண்டும். சட்டதிருத்தத்தின் எல்லையானது ஒரு சிலரது ஒரேவிதமான, குறுகிய பொருள்கோடல்களாக அவை பலமான, நன்கு தம் கருத்தை முன்வைக்கக் கூடிய பழமைமைவாத ஆண்களைக் கொண்ட குழுக்களாய் இருப்பினும் கூட அவற்றிற்குள் சிறைப்படாமல் இருத்தல் வேண்டும்.

### 4. இஸ்லாமிய சட்டவியலின் பன்மைத்தன்மையை அங்கீகரித்தல்

இஸ்லாமிய சட்டவியலானது நிலைமாற்றமில்லாத ஒன்று அல்ல என்பதுடன் இச்சட்டவியலானது சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களுக்கும், வெவ்வேறுபட்ட நடைமுறை தேவைகளுக்கும் முகம் கொடுக்கக் கூடிய வகையில் மாற்றமடைந்து வருகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது. உலகில் ஒரே ஒரு விதமான இஸ்லாமிய சட்டங்கள் மட்டுமே காணப்படுகின்றது எனும் மாயையானது முஸ்லிம் சட்டசீர்திருத்தத்திற்குள்ள பெரும் தடைகளுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. உலகிலுள்ள முஸ்லிம் சட்ட முறைமைகளை கூர்ந்து நோக்கினால் அல்குர்ஆனிய கட்டளைகளுக்கு பல்வேறுபட்ட, மிகப் பரந்துபட்ட பொருள்கோடல்கள் வழங்கப்பட்டிருப்பதனை அவதானிக்க முடியும். முஸ்லிம் பெண்களுக்கு நீதியையும், சமத்துவத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முஸ்லிம் சட்டங்களைத் திருத்துவதற்கு *இஜ்திஹாத்* (இஸ்லாமிய சட்டவியலுக்கு வியாக்கியானம் செய்தல்) முறைமையினைப் பிரயோகிப்பதன் ஊடாகவும் மற்றும் பால்நிலை சம்பந்தமாக வெவ்வேறுபட்ட முற்போக்கான சட்டங்களையும், கொள்கைகளையும் தெரிவு செய்வதன் ஊடாகவும் (தக்கைய்யுர் அல்லது பன்மைத் தெரிவு) இயலுமாய் இருக்கும்.

| **பிரச்சினைகள்** | **கோரிக்கைகள்** |
|---|---|

| | |
|---|---|
| **திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயதெல்லை** | • அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதெல்லை 18 என்பதனை அனைவருக்குமானதாகும் வகையில் முஸ்லிம் தனியார் சட்டம் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துக.<br>• 12 வயதுக்குக் குறைந்த அல்லது 12 வயதுக்குக் கூடிய சிறுவர்கள் திருமணம் முடிக்க தகுதி உடையவர்கள் என்பது தொடர்பான சகல பிரிவுகளையும் முஸ்லிம் தனியார் சட்டத்திலிருந்து நீக்கல் வேண்டும். திருமண வயதெல்லை என்பது தன்னிச்சையாகவோ மற்றும்.'.அல்லது ஒரு பிரதிநிதித்துவமற்ற குழுவாலோ, வேறு குழுக்களாலோ அல்லது தனிநபர்களாலோ தீர்மானிக்கப்பட விட முடியாது.<br>• மணமகனினதும், மணமகளினதும் பிறந்த ஆண்டு கட்டாயமாக திருமணப் பதிவுச் சான்றிதழில் பதியப்படல் வேண்டும். |
| **மணமகளின் சம்மதம் பெறப்பட்டதனை கட்டாயமாக வெளிப்படுத்தக் கூடிய எதுவித ஏற்பாடுகளும் இன்மை**<br><br>**மணமகளின் கைஒப்பத்திற்கான ஏற்பாடுகள் எதுவும் இன்மை** | • வயது வந்த முஸ்லிம் பெண்கள் இலங்கை பிரசைகள் என்ற வகையில் தமது திருமணம் தொடர்பில் தீர்மானம் எடுக்க பூரண சுதந்திரமும், சுயாதீனமும் உடையவர்களாக இருப்பதற்கு உரித்துடையவர்கள் என்பதுடன் திருமணம் ஒன்றில் ஈடுபடுவதற்கு தம் குடும்ப ஆண் உறவினர்களதோ அல்லது காதியினதோ "அனுமதியினை" பெற சட்டப்படி தேவைப்படுத்தப்பட வேண்டியதில்லை.<br>• மணமகளினதும், மணமகனினதும் சுயமானதும், பூரணமானதுமான சம்மதமின்றி எந்தவொரு திருமணமும் சட்டரீதியாக நிறைவேற்றப்படல் முடியாது. அச்சம்மதமானது சாட்சிகளோடு திருமணத்தை நிறைவேற்றி வைக்க அதிகாரமளிக்கப்பட்டவர்களின் முன்னிலையில், அவர்களாலேயே வெளிப்படுத்தப்படல் வேண்டும்.<br>• திருமணம் சார் அனைத்து உத்தியோகபூர்வமான ஆவணங்களிலும் மணமகனினதும், மணமகளினதும் கைஒப்பம் அல்லது விரலடையாளம் கட்டாயமாக்கப்படல் வேண்டும். ஏனைய தனிநபர்கள் (ஆண் அல்லது பெண்) சாட்சியாக கையொப்பமிடலாம்.<br>• சட்டரீதியாக அங்கீகரிக்கப்படுவதாயின் அனைத்து முஸ்லிம் திருமணங்களும் கட்டாயமாக பதிவு செய்யப்படுதல் வேண்டும். |
| **திருமண ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கான எந்தவொரு ஏற்பாடும் இன்மை** | • இஸ்லாமிய சட்டத்தில் உள்ளபடி திருமணத்தின் திறத்தவர்களான மணமகனும், மணமகளும் திருமணம் பதிவு செய்யப்பட முன்னர் பரஸ்பர சம்மதத்துடன் திருமண ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதனை முஸ்லிம் விவாக |

| | |
|---|---|
| | விவாகரத்துச் சட்டம் அங்கீகரித்தலும், அனுமதித்தலும் வேண்டும்.<br>• உதாரணமாக பலதாரமணம் தொடர்பான விடயங்களை திருமண ஒப்பந்தத்தில் குறிப்பிடலாம். |
| **பலதாரமணத்தை அனுமதிக்கின்றமை** | பலதாரமணமான நடைமுறையானது பெண்கள் மீதும், பிள்ளைகள் மீதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றமையினால் இந்நடைமுறை நீக்கப்படல் வேண்டும். எந்தவொரு காரணத்துக்காகவும் தொடர்ந்தும் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டமானது பலதாரமணத்தை அனுமதிக்கும் ஆயின், இவ்வனுமதியானது எக்காரணம் கொண்டும் துஷ்பிரயோகிக்கப்படாமல் இருப்பதனையும், இதன் கீழான கடமைகளையும், பொறுப்புக்களையும் தெளிவாக வெளிப்படையாக வரையறை செய்வதனையும் சட்டத்திருத்தமானது உறுதிப்படுத்தல் வேண்டும்.<br>• தன் கணவன் பலதாரமணம் புரிவதற்கான தெரிவைக் கொண்டிருக்கிறாரா இல்லையா என்பதனை ஒரு பெண்ணுக்கு அவளது திருமணம் ஒன்று பதிவு செய்யப்பட முன்னரே தெரிவித்தல் வேண்டும். அத்துடன் மணமகள் தன் சம்மதத்தை அல்லது சம்மதமின்மையை தெரிவிக்கக் கூடியதான ஏற்பாடுகளைக் கொண்டதான திருமண ஒப்பந்தத்தை செய்வதற்கான வாய்ப்பும் அளிக்கப்படுதல் வேண்டும்.<br>• இரண்டாவது அல்லது அதற்கு அடுத்தடுத்தான திருமணங்களைச் செய்வதாயின் ஏலவேயுள்ள மனைவி அல்லது மனைவியரிடம் அது தொடர்பில் தெரிவித்து அவர்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்தல் வேண்டும்.<br>• பலதாரமணத்துக்கான விண்ணப்பம் ஒன்றின் போது சமமாக நடத்தக் கூடிய கணவனின் தகைமை தொடர்பாக (முக்கியமாக பொருளாதார தகைமை) விசாரணை செய்ததன் பின்னரும், ஏலவேயுள்ள மனைவி அல்லது மனைவியரினதும், அடுத்ததாக திருமணம் செய்யவுள்ள மணமகளினதும் எழுத்து மூலமான அனுமதியினையும் பெற்றுக் கொண்டதன் பின்னர், அவ்விண்ணப்பத்தினை அனுமதிக்கவோ அல்லது நிராகரிக்கவோ காதியாருக்கு அதிகாரமளிக்கப்படல் வேண்டும்.<br>• திருமண பதிவுப் பத்திரங்களில் ஏலவே செய்யப்பட்ட அனைத்து திருமணங்கள் தொடர்பான விபரங்களும் இணைக்கப்படுதல் கட்டாயமாக்கப்படல் வேண்டும். |
| **ஆணுக்கும், பெண்ணுக்கும் சமத்துவமற்ற** | • கணவனாலோ அல்லது மனைவியாலோ செய்யப்படும் ஒரு தலைப்பட்சமான |

| | |
|---|---|
| **விவாகரத்துக்கான ஏற்பாடுகள்** | விவாகரத்துக்களை முஸ்லிம் தனியார் சட்டமானது அனுமதிக்கக்கூடாது. அத்துடன் *தலாக்குக்கான (கணவனால் செய்யப்படும் விவாகரத்து)* காரணம் பதிவு செய்யப்படல் வேண்டும்.<br>• திறத்தவர் விரும்பும் *மத்ஹப்பினை* (இஸ்லாமிய சட்ட பிரிவுகள்) பின்பற்றக் கூடிய தெரிவைக் கொடுப்பதுடன், வெவ்வேறு மத்ஹப்களிலிருந்தும் பெறப்பட்ட ஒப்புரவான, முற்போக்கான விவாகரத்து தொடர்பான ஏற்பாடுகள் கருத்தில் எடுக்கப்பட்டு முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் உள்வாங்கப்படல் வேண்டும்.<br>• முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தால் ஆளப்படும் அனைவருக்கும் விவாகரத்தின் வகைகள், விவாகரத்துக்கான காரணங்கள், மற்றும் வினைத்திறனான விவாகரத்து நடபடிகள் என்பன ஏற்புடைத்ததாய் இருக்க வேண்டும். மேலும் இச்சட்டமானது பெண்களுக்குரிய *பஸஹ்* (மனைவியால் கோரப்படும் விவாகரத்து) முறையினை இச்சட்டத்தால் ஆளப்படும் அனைத்து முஸ்லிம் பெண்களுக்கும் உரித்துடையதாக அங்கீகரித்தல் வேண்டும். |
| **மஹர் இனை மீளப் பெற்றுக் கொள்வதற்கான பொருத்தமற்ற ஏற்பாடுகள்** | திருமணப்பதிவின் போது வாக்களிக்கப்பட்ட மஹர் இனை கணவன் செலுத்தத் தவறும் போது அதனை மீளப்பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் தெளிவாக ஏற்படுத்தப்படல் வேண்டும். இவ்வுரிமையானது திருமணம் வலுவிலிருக்கும் எச்சந்தர்ப்பத்திலாயினும், விவாகரத்தின் போதும் கோரிப்பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். |
| ***மதாஹ்* (நட்டஈடு) கொடுப்பனவிற்கான எதுவிதமான ஏற்பாடுகளின்மை** | முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டமானது கணவன் மனைவியை விவாகரத்துச் செய்யும் தலாக் வழக்கின் போதும், மனைவி கணவனின் தவறின் காரணமாக விவாகரத்துக் கோரும் பஸஹ் வழக்கின்போதும் கணவன் மனைவிக்கு நட்டஈடாகிய மதாஹ்வினை கட்டாயம் செலுத்த வேண்டியதான சட்டப்பிரிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| **பராமரிப்புத் தொகையினைத் தீர்மானிப்பதற்கான எதுவித வழிகாட்டல்களும் இன்மை** | • முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டமானது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் சேர வேண்டிய பராமரிப்புத் தொகையினை மதிப்பிட அல்லது தீர்மானிப்பதற்கென பிரத்யேகமான வழிகாட்டல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>• வாழ்க்கைத்துணை வெளிநாட்டில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொழில் தருநருக்குப் பிறப்பிக்கப்படும் வலுவாக்கல் உள்ளடங்கலாக இலங்கையின் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் நீதவானுக்குள்ள அதிகாரத்தை ஒத்த |

| | |
|---|---|
| | வகையிலான அதிகாரம் காதிக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.<br>• பராமரிப்பிற்காக வழக்கிடப்பட்ட காலத்தில் இருந்தன்றி பராமரிப்பினைச் செலுத்தாமல் நிறுத்தப்பட்ட காலத்திலிருந்து பராமரிப்பினைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் சட்ட ஏற்பாடிருத்தல் வேண்டும்.<br>• ஒரு பெண் தான் வசிக்கும் இடத்தில் உள்ள நீதிமன்றில் (வலுவாக்கல் கட்டளைக்கு) பராமரிப்பு வழக்கிட அனுமதிக்கப்படல் வேண்டும்.<br>• பராமரிப்புத் தொகையானது நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்பட விண்ணப்பதாரி கோருமிடத்து அதற்கான சட்ட ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும். |
| **இஸ்லாத்துக்கு முரணான கைக்கூலி (சீதனம்) வழக்காறு அனுமதிக்கப்பட்டுள்ளமை** | • கைக்கூலி வழங்குவதும், பெறுவதும் இஸ்லாத்துக்கு முரணான வழக்கம் என்பதோடு அது அடிக்கடி பெண்களை பாதிப்புக்குள்ளாக்குகின்றது என்ற வகையில் தண்டனைக்குள்ளாக்கப்படல் வேண்டும்.<br>• ஏதோவொரு காரணத்துக்காக இப்பழக்கத்தை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டி ஏற்படுமிடத்து அதனை காலப்போக்கில் குறைக்கவும் அன்றேல் இல்லாமலாக்கவும் அனைத்து கைக்கூலி கொடுப்பனவுகளும் (அசையும் மற்றும் அசையாத ஆதனங்கள்) கட்டாயமாக திருமணப் பதிவின் போது பதிவு செய்யப்படல் வேண்டும்.<br>• திருமணம் வலுவிலிருக்கும் போதாயினும், பிரிந்திருக்கையில் அல்லது விவாகரத்தின் போதான எச்சந்தர்ப்பத்திலும் கைக்கூலியினை மீளப் பெறுவதற்கான தெளிவான நடபடி ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.<br>• *மஹர் (கணவனால் மனைவிக்குச் செலுத்தப்படும் இஸ்லாமிய அடிப்படையிலான திருமணக் கொடை)* இனை செலுத்தும் வரையும் மற்றும் கைக்கூலியினை மீளச் செலுத்தும் வரையும் *தலாக்* கோரிக்கையானது முடிவுறுத்தப்படக் கூடாது. |
| **எந்த பிரிவைச் சேர்ந்தவர் என்ற சட்ட அடிப்படை தேவையற்ற குழப்பங்களை தோற்றுவிக்கின்றது** | • *தக்கையுர்* அல்லது வெவ்வேறுபட்ட இஸ்லாமிய சிந்தனைகளின் அடிப்படையில் (உதாரணமாக: 4 மத்ஹப்களின் அடிப்படையில்) பெண்களையும், பிள்ளைகளையும் கருத்தில் கொண்டதான விரும்பத்தக்க பொருத்தமான விதியைத் தெரிவு செய்து அச்சட்டத்தை பிரயோகித்தல்.<br>• வெவ்வேறு மத்ஹப்களில் காணப்படும் ஒப்புரவான மற்றும் முற்போக்கான ஏற்பாடுகள் கருத்தில் எடுக்கப்பட்டு முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் உள்வாங்கப்படுதல் வேண்டும்.<br>• எந்தவொரு மத்ஹப்பையும் (உதாரணமாக: *ஷாபி,* |

| | |
|---|---|
| | *ஹனபி, மலிகி, ஹன்பலி*) சேர்தல் அல்லது சேராதிருத்தல் என்னும் உரிமையானது தனிப்பட்ட தீர்மானம் என்பதுடன் தனிநபருக்கான உரிமை மட்டுமன்றி அதனில் யாரும் தலையிட முடியாது என்பதனை அங்கீகரித்தல். |
| **முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தைத் தவிர வேறு தெரிவின்மை** | முஸ்லிம்களுக்கு முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தினை தெரிவுக்குரியதொன்றாக ஆக்குக. திருமணத்தின் இரு திறத்தவரும் விரும்பின் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் கீழ் தம் திருமணத்தைப் பதியாமல் பொது திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தம் திருமணத்தை பதிவு செய்வதற்கான தெரிவுரிமை இருத்தல் வேண்டும். இந்த ஏற்பாடானது ஏனைய முஸ்லிம் அல்லாத நாடுகளில் காணப்படுவதைப் போன்று திருமணத்தின் போது இஸ்லாமிய திருமணச் சடங்குகள் இடம் பெறும் அதே நேரம், திருமணப்பதிவானது பொதுச் சட்டத்தின் கீழானதாய் இருப்பதை ஒத்ததாய் இருக்கும். |
| **ஆலோசனைச் சபை நியமிக்கப்படாமை** | • முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் தொடர்பான தெளிவும், அனுபவமும் கொண்ட, தேவையான விடயங்களில் பதிவாளர் நாயகத்துக்கும் ஆலோசனை வழங்கத்தக்க தகுதிவாய்ந்த தனிநபர்கள் ஆலோசனைச் சபைக்கு நியமிக்கப்படல் வேண்டும்.<br>• ஆலோசனைச் சபையானது ஆகக்குறைந்தது 50 சதவீதமான பெண்களைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| **காதிகளாகவோ, ஜுரிகளாகவோ, திருமணப் பதிவாளர்களாகவோ, காதிகள் சபை அங்கத்தவராகவோ பெண்கள் நியமிக்கப்படுவதனை தடை செய்கின்றது** | • பெண்கள் காதிகளாகவோ, ஜுரிகளாகவோ, திருமணப் பதிவாளர்களாகவோ, காதிகள் சபை அங்கத்தவராகவோ நியமிக்கப்பட தகுதியுடையவர்களாக்கப்படல் வேண்டும்.<br>• இப்பதவிகளில் இருந்தும் பெண்களை சட்டரீதியாக விலத்தி வைப்பது அல்லது தகுதியற்றதாக்குவது இலங்கைப் பிரசை என்ற வகையில் தான் விரும்பும் தொழிலைச் செய்வதற்கு ஒரு முஸ்லிம் பெண்ணுக்குள்ள சமத்துவத்துக்கான உரிமை மீதான நேரடியான மீறலாகும்.<br>• இவை அரசால், அரச வரிப்பணத்திலிருந்து ஊதியம் வழங்கப்படும் நியமனங்களாகும். இவற்றிலிருந்து பால்நிலை காரணமாக பெண்கள் விலத்தி வைக்கப்பட்டுள்ளமையானது இலங்கை அரசு நேரடியாக முஸ்லிம் பெண்களை பாரபட்சத்துக்குள்ளாக்குவதற்கு வழியமைத்துள்ளது.<br>• முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டமானது ஜுரிகள் இருக்கும் வழக்கு விசாரணையின் |

| | |
|---|---|
| | போது ஆகக் குறைந்தது 2 பெண்களாவது ஜூரர்களாக இருப்பதனை கட்டாயமாக உறுதி செய்ய வேண்டும்.<br>• காதிகள் சபையில் 5இல் 3 ஆவது (60சதவீதம்) சட்டத்தரணிகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஆகக் குறைந்தது 5இல் 2 ஆவது பெண்கள் (40சதவீதம்) இருத்தல் வேண்டும். |
| **காதி நீதிமன்றங்களுக்கு போதிய தரமின்மை** | • காதிகள் நியமனமானது ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுதி மற்றும் தகைமைகளின் அடிப்படையில் இடம் பெறல் வேண்டும்.<br>• காதியானவர் ஒரு முஸ்லிம் ஆணாகவோ பெண்ணாகவே சட்டத்தில், பகிரங்க சேவையில், சமூக சேவையில், மத்தியஸ்தத்தில், மற்றும் அல்லது உளவளத்துணை ஆலோசனையில் அல்லது பொருத்தமான தொழிலில் ஆகக் குறைந்தது 10 வருட சேவை புரிந்தவராய் இருத்தல் வேண்டும். அத்துடன் இது தொடர்பான மார்க்கச் சட்டத்தில் போதிய அறிவுடையவராயும் இருத்தல் வேண்டும்.<br>• காதிகளை நியமிப்பதற்காக ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நடபடி முறைமை காணப்படல் வேண்டும். சமூகம் சார்ந்த நடுவர்களால் விண்ணப்பிக்கப்படல், நேர்முகத் தேர்வு நடபடி, என்பன காணப்படல் வேண்டும்<br>• நியமிக்கப்பட முன்னரும் நியமிக்கப்பட்ட பின்னர் தொடர்ச்சியானதுமான போதிய பயிற்சிகள் காதிகளுக்கு வழங்கப்படல் வேண்டும்.<br>• தாம் வகிக்கும் பதவியின் நீதித் தன்மைக்கேற்ப காதிகளுக்கு போதிய கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும்.<br>• முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம், சட்டம், நடபடி, பால்நிலை கூருணர்வு, ஒழுக்கக் கோவைகள் தொடர்பாக பதவி எடுக்க முன்னரே காதிகளுக்கு கட்டாயமாக பயிற்சி கொடுக்க வேண்டும் என்பதனை சட்டரீதியாக ஏற்பாடு செய்தல்.<br>• அந்தரங்கத்தையும், நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்காக காதிநீதிமன்ற கட்டடங்களை மேம்படுத்தல்.<br>காதிநீதிமன்றை நாடி வருபவர்களுக்கு காதிகள் வேறுபட்ட விவாகரத்து நடபடிகள், பராமரிப்பு, போன்றன தொடர்பாக விளக்கமளிக்க காதிகள் தேவைப்படுத்தப்படல் வேண்டும்.<br>• குடும்ப வன்முறை வழக்குகள் கட்டாயமாக பொலிஸாரிடம் பாரப்படுத்தப்படல் வேண்டும்.<br>• காதிகள் மற்றும் காதிநீதிமன்றங்களின் செயற்பாட்டினை கண்காணிக்க ஒழுங்கு முறையொன்றினை நீதிச் சேவை ஆணைக்குழு கொண்டிருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| | • எல்லா நீதிமன்றங்களும் நீதிமன்ற நடபடியின் போது பெண்களுக்கு ஆதரவளிப்பதற்காக கட்டாயமாக பெண் உளவளத்துணை ஆலோசகர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| **காதிநீதிமன்றங்களை மேற்பார்வை செய்யும் முறைமை இன்மை** | • காதி நீதிமன்ற நடபடிகளையும், பதிவுகளையும் கண்காணிப்பதற்காக ஒரு முறைமையை நிர்மாணித்தல்<br>• கண்காணிப்பின் கீழான அவதானிப்புகளாவன தொடர்ச்சியான பயிற்சிகளில் உள்வாங்கப்படல் வேண்டும். உடனடியான, அவசரமான திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பின் கண்காணிப்பு அதிகாரி நேரடியாக குறித்த காதிக்கு பரிந்துரையினை மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்.<br>• இந்நீதிமன்றங்களை அணுகும் பொதுமக்களுக்கு முறைப்பாட்டு முறைமை தொடர்பாகவும், அவை நீதிச் சேவை ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படும் என்பது தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டலை உறுதிப்படுத்தல். முறைப்பாடு தொடர்பான அடிப்படைகள் தெளிவாக இருத்தல் வேண்டும். இவை காதிகளின் நடவடிக்கை சார்பானதாக இருத்தல் வேண்டுமே தவிர மேன்முறையீட்டு வழக்கிற்கு அடிப்படையானதான முறைப்பாடாக இருத்தல் கூடாது. உதாரணமாக, துஷ்பிரயோகம் அல்லது, மற்றும் நீதிமன்றின் முன் தோற்றிய நபரின் மீதான மோசமான நடாத்துகை, (நீதிமன்றம் உள் அல்லது வெளியில்), பாலியல் அல்லது ஏனைய விதத்திலான இலஞ்சம், இன்ன பிற…<br>• நீதிச் சேவை ஆணைக்குழுவானது எந்தவொரு முறைப்பாடு தொடர்பிலும் விசாரணை செய்தல் வேண்டும் என்பதுடன் பிழையான நடத்தை அல்லது குற்றவியல் நடத்தைக்காக குற்றவாளியாகக் காணப்படுமிடத்து அக்காதிக்கு எதிராக பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |